[9th July 1962

மேலும் குழப்ப வேண்டாம், அரசியலுக்குத் தமிழை பயன் படுத்திக் கொள்ளவேண்டாம் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தமிழ் போதனை மொழியாக்கப்பட வேண்டும் என்று சொல்லும் தலைவர்களின் குழந்தைகள் பெரும் பாலும் ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருப் பதை அரசாங்கம் அறியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதெல்லாம் எனக்குத் தெரி யாது. 'பெரும்பாலும்' என்று சொல்ல முடியாது. ஒன்றிரண்டு இருக்கலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: 'பி.ஏ.' வகுப்பிலே தமிழில் படிக்க மாணவர்கள் வரவில்லை' என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருந்தக்கூடிய விஷயம்தான் அது. ஆனால் 'பி.ஏ.' வகுப்பில் தமிழில் படித்துவிட்டு மேலே 'போஸ்ட்-கிராஜு வேட்' படிப்புக்குப் போகிறபோது, ஆங்கிலத்திலேயே எல்லாப் பாடங்களையும் படிக்கவேண்டியிருக்கிற கஷ்டத்தினால் 'பி.ஏ.'-இல் தமிழில் படிக்க மாணவர்கள் வரவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்வாரா? அப்படி உணர்ந்தால், 'போஸ்ட்-கிராஜு வேட்' வகுப்பைக்கூட தமிழில் கொண்டுவந்தால் நல்ல முறையில் தமிழ்க் கல்வி வளரும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து அதற்கான நல்ல நடவடிக்கை எடுப்பாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுவும் காரணமாக இருக்க லாம். அப்படி 'போஸ்ட்-கிராஜுவேட்' படிப்பையும் தமிழில் கொண்டு வரலாம். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அது படிப்படியாக நடக்கும். அது மாத்திரமல்ல. இப்பொழுது படிக் கின்ற மாணவர்களுக்கு உயர்ந்த லட்சியம் இருக்கிறது. வேறு சர்வகலாசாலைகளுக்குச் செல்ல வேண்டும், அன்னிய நாடுகளிலே சென்று உயர் படிப்புப் படிக்க வேண்டும் என்ற ஆசை அவர் களுக்கு இருக்கிறது. அதற்கெல்லாம் இது குந்தகமாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளிலுள்ள சர்வகலாசாலைகளில் இதற்காகத் தமிழைப் போதனைமொழியாகக் கொண்டு நடத்த முடியுமா என்று நான் கேட்கிறேன்.

இரும்பு (புதுக்கோட்டை வட்டம்).

* 194 **கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை பகுதியில் உள்ள நீர்ப்பழனி பிர்க்காவில் கிடைக்கும் இரும்பைத் தோண்டி எடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The answer is in the negative.

9th July 1962]

திரு. பி. முருகையன் : கனம் அமைச்சர் அவர்கள், 'இல்லை' என்று கூறியதற்குக் காரணத்தை நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே பூகர்ப்ப ஆராய்ச்சி நடத்துகிறார்கள். அங்கு வெட்டிப் பார்த்ததிலே, 23 சத விகிதத்திலிருந்து 37 சத விகிதத்திற்குக் குறைவான இரும்புக் கனிதான் இருக்கின்றது. இருப்பதும் மிகக் குறைவானது. இருக்கின்ற அளவைப் பார்த்தால், ஐம்பதாயிரம் டன்தான் மொத்தமே இருக்கும் போல் இருக்கிறது. ஐம்பதாயிரம் டன் கனிப்பொருள் என்பது ஆலைக்கு ஒரு நாளுக்குக்கூடப் போதாது.

ஆசிரியர் சம்பள விகிதம்.

* 195 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ஜில்லாவாரியாக எத்தனை செகண்டரி கிரேட் அல்லது சீனியர் பேசிக் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளம் பெற்று வேலை செய்துவருகிறார்கள்?

(இ) செகண்டரி கிரேடு அல்லது சீனியர் பேசிக் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர் ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளில் 5-வது வகுப்பு ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்கள்?

(உ) அவர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்க்குரிய சம்பள விகிதம் கொண்ட வழங்கப்படுகிறதா?

(எ) இல்லையென்றால், காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The time and labour involved in gathering these particulars may not be commensurate with the object in view.

(உ) & (எ) If the teachers were appointed in aided elementary schools before 1st April 1958 or if they are working in sanctioned secondary grade posts they will be assessed for grants in the secondary grade scale. Otherwise, they will be assessed for grants in the higher elementary grade scale only.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஹைஸ்கூல்களிலும் ஐந்தாவது ஸ்டாண்டர்டு இருக்கிறது. எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஐந்தாவது ஸ்டான்டர்டு இருக்கிறது. செகண்டரி கிரேட் டீச்சர் நியமனம் ஆவதற்கு 'ஸாங்ஷண்டு போஸ்ட்'-ஆக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எலிமெண்டரி ஸ்கூலிலும் ஹைஸ்கூலிலும் 5-வது வகுப்பில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் இருக்க வேண்டும். ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் இருக்கக்கூடிய ஐந்தாவது ஸ்டாண்டர்டில் யாரும் இருக்கலாம்—ஹையர் கிரேடாகவும் இருக்கலாம். ஸ்டான்டர்டில் ஹையர் கிரேடாகவும் இருக்கலாம் செகண்டரி கிரேடாகவும் இருக்கலாம் என்பது முறைதானா? அப்படியிருக்குமானால், அதை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?